ஞானிகளாக மாறுவதற்கு இந்த ஞானிகள் அறிவிலிகளாக மாறினர்.

- புனித கிளவோ பெர்னட்

அமளி நிறைந்த காலத்தில்தான், “ஆண்டவர் திருக்காட்சி விழாவை” திருஅவைக் கொண்டாடுகிறது. “திருக்காட்சி” ஒரு திடீர் பெரும் வெளிப்பாடு எனலாம். இதற்கு முன்பு அவ்வளவாக தாக்கத்தை அல்லது மாற்றத்தைக் கொண்டு வராத ஒன்றை, திடீரெனப் புரிந்து கொள்வது அல்லது உணருவதை இது பிரதிபலிக்கிறது. வழக்கமான வாழ்க்கையில் ஓர் அதித தருணத்தை உணரும் அனுபவம் இது.

இன்றைய வாசகங்களும் திருப்பாடலும் இம்மாதிரியான தருணத்தை வெளிப்படுத்துகின்றன. கடவுளின் மாட்சி மக்கள் மீது வெளிப்படுவதை எசாயா அகமகிழ்கிறார். கடந்த தலைமுறையில் எவருக்கும் வெளிப்படாத மறைபொருளின் ஞானத்தைத் தாம் பெற்றிருப்பது ஒரு வெளிப்பாடு என பவுல் கூறுகிறார். நற்செய்தியில், இயேசுவின் பிறப்புக் குறித்தத் தருணங்கள் பற்றி நாம் படிக்கிறோம். மனித வரலாற்றில் ஓர் அதிசய நிகழ்வு.

“திருக்காட்சி”, கிறிஸ்துவ உணர்வோடு பார்த்தால், திடீர் வெளிப்பாட்டு அனுபவம் என்று மட்டும் கூறி விட முடியாது. நாம் அனுமதித்தால், இந்த தருணங்கள் நமது வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வரும். “கடலின் திரள் செல்வம் உன்னிடம் கொணரப்படும்; பிற இனத்தாரின் சொத்துகள் உன்னை வந்தடையும்” என்று மக்கள் மீது கடவுள் மாட்சி விளங்குமென ஏசாயா முன்னுரைக்கிறார். டமஸ்கஸ் செல்லும் பாதையில் கடவுளின் வெளிப்பாட்டை காணும் பவுல், நற்செய்தி மறைப்பரப்புப் பணியில் ஈடுபடுகிறார். “யூத குழந்தை அரசன்” பிறப்பின் முக்கியத்தை உணர்ந்த ஞானிகள், அவரைக் காண நெடுந்தூரப் பயணத்தை மேற்கொள்கின்றனர். ஆண்டவரின் திருக்காட்சி விழா, நமது அன்றாட வாழ்க்கையிலிருந்து விழிந்தெழுந்து, அதித ஒன்றை நோக்கி பயணிக்க நம்மை உந்துகிறது.

“திருமுழுக்குப் பெற்று அனுப்புதல்: கிறிஸ்துவின் திருஅவை உலகில் மறைப்பரப்புகிறது”, என்ற கருப்பொருளை மறைப்பரப்பு மாதமான அக்டோபர்(2019) மாதத்திற்கு திருத்தந்தை பிரான்சிஸ் தேர்வு செய்திருக்கிறார். திருத்தந்தையின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, இவ்வாண்டு முழுவதும் மறைப்பரப்பு முக்கிய இலக்காக இருக்க தீவகற்ப மலேசிய ஆயர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். **“திருமுழுக்குப் பெற்று அனுப்புதல்”, தீவகற்ப மலேசியாவின் பொதுவான கருப்பொருள்.** இந்த கருப்பொருளும் மாதாந்திர துணைக் கருப்பொருளும் இவ்வாண்டு முழுவதும் நாம் பயணிக்க ஒரு வழிகாட்டியாக அமையும். அதற்கு “ஆண்டவரின் திருக்காட்சி” விழா நல்லதொரு தொடக்கம். நாம் ஒவ்வொருவரும் ‘எதிர்நோக்கு சீடர்கள்’ என்பதை நினைவுப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெற்ற நாம், அதீத செயல் புரிய இவ்வுலகிற்கு நாம் அனுப்பபப்பட்டுள்ளோம். ✝

**Scripture of the Day:**
Is. 60: 1-6;
Ps. 71: 1-2, 7-8, 10-13;
Eph. 3: 2-3, 5.6;
Mt. 2: 1-12

**வாரம் ஒரு வசனம்**

**இவ்வாண்டின் இலக்கு மறைப்பரப்புப் பணி**

INTERNAL CIRCULATION ONLY
BUL 01/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

6 ஜனவரி 2018

# NewDec
NEW WAY OF BEING CHURCH

ஆண்டவரின் திருக்காட்சி

தி ரு மு ழு க் கு ப்   பெ ற் று   அ னு ப் ப டு த ல்

மாதாந்திர கருப்பொருள்:

## கிறிஸ்துவில் நம்மை இணைக்கிறது

# அற்பமானதை அதியசமாக்குவது

ஆண்டுகள் உருண்டொடி இருக்கலாம், ஆனால் வாழ்க்கை வழக்கம் போல் நகர்கிறது. கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் குறைந்து, அன்றாட வழக்கமான வாழ்க்கைக்கு விரைவாகவும் அமைதியாகவும் நாம் நகர்ந்துள்ளோம். பள்ளிக்கூடம் மீண்டும் திறக்கப்படுகிறது, நீண்ட விடுமுறைக்குப் பின்னர் வேலைக்குத் திரும்பும்



Image: ©123rf.com



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

# திருமுழுக்கு பெற்று அனுப்புதல்

*2019 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*

# கிறிஸ்துவில் நம்மை இணைக்கிறது

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: ஆண்டவரின் திருக்காட்சி சனி 05-01-2019 - ஞாயிறு 13-01-2019**

எசாயா : 60: 1-6, 24-28 தி.பா: 71: 1-2, 7-8, 10-11, 12-13 எபேசியர்: 3: 2-3, 5-6 மத்தேயு : 2: 1-12

**"ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள்" - திபா 83**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 05 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித பெனடின் 2) | |
| ஞாயிறு | 06 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித ஜஸ்டின்)<br>திருப்பலி (ஆ) (புனித பெனடின் 3)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 07 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 08 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 09 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 10 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 11 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) புனித லூர்துத அன்னை சிற்றாலயம் - சாகா*** |

**ஆண்டவரின் திருமுழுக்கு**

எசாயா : 40: 1-5, 9-11 தி.பா: 103: 1-2, 3-4, 24-25, 27-28, 29-30 தீத்து: 2: 11-14; 3: 4-7 லூக்கா : 3: 15-16, 21-22

**"என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு" - திபா 103**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 12 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித பெனடின் 2) | |
| ஞாயிறு | 13 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (லூர்து அன்னை - சாகா)<br>திருப்பலி (ஆ) (புனித கத்தெரின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

***2018 டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்***

1) பங்கு காணிக்கை:

அ) 29/30 டிசம்பர் 2019 ரிம:9,584.80

ஆ) புத்தாண்டு திருவிழிப்பு 31/12/18 - ரிம:3,427.25

இ) புத்தாண்டு திருப்பலி 01/01/2019 ரிம: 10,082.80

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

05/06 திருப்பலிகளில் சமூக அக்கறைப் பணிக்குழுவினரின் நிதிக்காக 2 ஆவது காணிக்கை எடுக்கப்படும்.

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்**

சத்யநாதன் & மோனிகா 12-1-2019 பகல் 3.30

ஜோன் மெய்னார்ட் & லிசா டியானா 19-1-2019 காலை 11.00

சாமுவல் பிரான்சிஸ் & கேத்ரீனா 19-1/2019 பகல் 3.30

- **திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு**: குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்பாக, விண்ணப்ப படிவத்தைப் பங்கு அலுவலகத்தில் பூர்த்தி செய்தபின் குருவானவரை சந்திக்க தேதியை முன்பதிவு செய்துகொள்ளுங்கள் 2019 ஆம் ஆண்டுக்கான திருமண முன் தயாரிப்புப் பயிற்சிகள் விரைவில் தொடங்க உள்ளன.
- **காலை சிற்றுண்டி விற்பனை**: பொங்கல் திரு நாளின் நிதிக்கா கதமிழ் அப்போஸ்தலப் பணிக்குழுவினர் ஏற்பாடு செய்கின்றனர். **(பொங்கல் நாள்:19 & 20)** உங்களின் ஆதரவைத் தாருங்கள்
- **அதிச திருப்பலியை வழி நடத்தும் 2019 ஆம் ஆண்டின் பெயர்ப்பட்டியல்** தயாராய் உள்ளது. அதிச/சோன் பொறுப்பாளர்கள் பங்கு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
- **திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனை:**
  அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (ஆங்கிலம்) ரிம:6.00
  ஆ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (தமிழ்) ரிம:5.00
  இ) 2019 விவிலிய நாட்குறிப்பு (ஆங்கிலம்/தமிழ்) ரிம:20.00

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித ஜஸ்டின் அதிச (சிரம்பான் ஜெயா) வினருக்கு நமது நன்றிகள்

"சிறப்பு மறைப்பரப்புப் பணி ஆண்டு"

- **2019 அக்டோபர் மாதம்வரை -10 மாதங்கள் சிறப்பு தூதுரைப் பணி மாதமாக இணைந்து தயாரிக்க திருத்தந்தை பிரான்சிஸ் நம்மை அழைக்கிறார்.**
- **கருப்பொருள்**: திருமுழுக்குப் பெற்று அனுப்புதல்- இவ்வுலகில் திருஅவை ஒரு மறைப்பரப்புப்பணி
- **நோக்கம்**: மறைப்பரப்புபணியின் விழிப்புணர்வை அதிகரிக்கவும், மறைப்பரப்புப்பணியின் உருமாற்றத்தின் தூண்டுதலை அதிகரிக்கவும் செய்தல்
- இவ்வுலகில் திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் அழைத்து, மறைப்பரப்புப் பணியைச்செய்யும் பொறுப்பெடுத்துக்கொள்ள அழைத்தல். **ஜனவரி** 13, 2019 (ஆண்டவரின் திருமுழுக்கு) அன்று அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டு **அக்டோபர்** 31, 2019 நிறைவு அடைகிறது

- **பினாங்கு குருமடத்திலிருந்து குருமட மாணவர் சகோதரர் பிலிப் ஆசீர்வாதம்** (தத்துவவியல் 2 ஆம் ஆண்டு) ஒரு மாத காலம் (03/01 - 03/03/2019 ) நம் பங்கிற்கு மேய்ப்புப்பணி அனுபவத்திற்காக வந்துள்ளார். அவருக்கு நம் ஆதரவை வழங்குவோம்.
- **மறைக்கல்வி வகுப்புகள்(அனைத்துமொழி)** ஜனவரி 6 ஆம் தேதி தொடங்குகிறது. பதிவுகள் அந்தந்த வகுப்புகளில் நடைபெறும். வகுப்பறைகளில் உள்ள மேசை, நாற்காலிகளை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்த வேண்டாம். அவற்றை சேதப்படுத்தாமல் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **குருத்துவ/துறவற அழைப்புக்கு மறுமொழி கொடுக்கும் எண்ணம் உள்ளதா?** பங்கு குருக்கள் அருட்திரு ஜோர்ஜ் & சேவியர் அவர்களோடு இதைப் பற்றி உரையாட ஒரு வாய்ப்பு நாள்:12/01/2019(சனி) காலை 9.00மணி
- **உருவாக்கப் பயிற்சி/உரை: " இன்றையை உலகில் மறைப்பரப்புப் பணியின் சீடர்கள்"** என்ற கருப்பொருளில் உருவாக்கப் பயிற்சி: வழங்குபவர்: ஜூட் அந்தோன் (கோலாலம்பூர்) நாள்:21-10-2019 (திங்கள்) தைப்பூசம்-பொதுவிடுமுறை - உருவாக்கப் பணிக்குழு மற்றும் தூய ஆவி அருங்கொடைப் பணிக்குழுவினர் இணைந்து இதை ஏற்பாடு செய்கின்றனர். கட்டணம் ரிம:10/-

- **ஜனவரி 10** - நெகிரி மேய்ப்புபணி கூட்டம் - மினவுதல் தேவாலயம், மாலை 7.00
- **ஜனவரி 14-17** குருக்களின் ஆண்டு மேய்ப்புப்பணி மா நாடு (**CAPA**)
- **ஜனவரி 19 & 20** பொங்கல் திரு நாள்
  19–01–2019 (சனி) மாலை 6.30 மணிக்கு – "பொங்கல் கலை இரவு" – ஆலய மண்டபம்
  20–01–2019 (ஞாயிறு) காலை 7 மணிக்கு திருப்பலி, நண்பகல் 2.30 முதல் மாலை 7 மணி வரை தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள், கலாசார நிகழ்வுகள், சிறப்புப் பட்டிமன்றம் தலைப்பு : இன்றைய காலத்தில் செல்போன்கள் (Cell Phone) தொல்லையா? துணையா? தொடர்ந்து தேநீர் விருந்து இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
- **ஜனவரி 23 (புதன்)** அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இடம்: தேவாலய மண்டபம், இரவு 8.00
- **ஜனவரி 25 (வெள்ளி)** கிறிஸ்துவ ஒற்றுமை வாரம் - செப வழிபாடு-சிரம்பான் மெத்தோடிஸ்ட் ஆலயம், இரவு 8.00

**ஜனவரி 27 (ஞாயிறு)** மாலை 5 மணிக்கு, ரஹாங் -புனிதவனத்து சின்னப்பர் சிற்றாலய திருவிழா -நற்கருணை ஆராதனை / திருப்பலி / ஒன்றுகூடல்